**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 32/2020 PW 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேதுராஜ் | தந்தை/கணவர் பெயர்: அய்யப்பன் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : சார்பு ஆய்வாளர் ஓய்வு |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2026

---

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

**06.08.2026 முதல் விசாரணை:**

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று கீழச்சேவல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 29.03.2019 –ம் தேதி எஸ்.வி.மங்கலம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது தங்கராஜ் மனைவி அன்புச்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன் பெற்று மனு ரசீது எண்.72/2019 பதிவு செய்து வைத்திருந்த புகாரினை எடுத்துக்கொண்ட புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.48/2019 –ல், ச/பி. 294 (பி), 323, 506 (2) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 19.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அழகு, முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் அம்சவள்ளி, செல்வி, ரவி, அழகு, கருப்பையா, தங்கராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம்

பதிவு செய்தேன். எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன் பிணை பெற்றதால், கைது செய்யவில்லை. இவ்வழக்கில் எனது விசாரணையை முடித்து 03.04.2019 –ம் தேதியன்று எதிரிகள் மீது மேற்சொன்ன சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

சம்பவம் நடந்து 4 நாட்கள் கழத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். காலதாமதத்திற்கான காரணங்கள் சொல்லப்படவில்லை. ஆயுதத்தின் எண்ணிக்கை, நீள, அகல அளவு சொல்லவில்லை. சம்பவத்தின் பயன்படுத்தப்பட்டதாக சொல்லும் கம்பியை நான் கைப்பற்றவில்லை. புகார்தாரருக்கு சம்பவத்தில் கம்பி மற்றும் கையால் தாக்கப்பட்டதால் காயங்கள் ஏற்பட்டதா என்றால், இல்லை. மருத்துவச்சான்றுகள் புகார்தாரர் கொடுக்கவில்லை, வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதாக கூறினார். அதற்கான ஆவணங்களும் தரவில்லை. சம்பவயிடத்திற்கு நான் 29 –ம் தேதி மாலை 07.00 மணிக்கு சென்றேன். இருதரப்பினருக்கும் முன்பகை இருந்த விவரம் எனது விசாரணையில் தெரிய வந்தது. அதற்கான ஆவணங்கள் நான் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை. நான் புகார்தாரருக்கோ, சாட்சிகளுக்கோ அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்யவில்லை. சம்பவமானது புகார்தாரர், எதிரிகள் வீட்டிற்கு இடையே நடைபெறவில்லை. சம்பவமானது புகார்தாரர் வீட்டிற்கு முன்பாக நடைபெற்றது. புகார்தாரர் வீட்டிற்கு முன்பாக சின்னம்மாள் வீடு உள்ளது. நான் பார்வை மகஜர் இரண்டு சாட்சிகள் ரவி மற்றும் முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் தயார் செய்தேன். பார்வை மகஜர் சாட்சிகளாக அழகு, நல்லான் என்பவர்களை பட்டியல் சாட்சியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். சரிவர விசாரணை செய்யாமல் அவசர அவசரமாக புகார்தாரருக்கு ஆதரவு ஏற்படுத்த குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.